TNVR020014832020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.497/2020

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.550/2019 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | மணிமாலா, (46/19),<br>க/பெ.அந்தோணிராஜ்,<br>போஸ்ட் ஆபீஸ் ரோடு,<br>அனுப்பன்குளம்,<br>சிவகாசி. | |
| சம்பவம் நடந்த நாள் | | 26.10.2019 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 25.11.2019 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 26.11.2019 | 31.12.2019 |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 12.02.2026<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 30.05.2022 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 19.12.2023 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 13.03.2024 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 24.06.2025 ம் தேதி முதல் விசாரணை குறுக்கு விசாரணை<br>அ.சா.4 03.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br>அ.சா.5 03.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br>அ.சா.6 05.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br>அ.சா.7 09.02.2026 ம் தேதி முதல் விசாரணை 12.02.2026 குறுக்கு விசாரணை<br>அ.சா.8 19.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 26.02.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | Crmp.152/2026 dated.12.02.2026 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சா.பொ.1 ஆன சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சா.பொ.2 ஆன சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சா.பொ.3 ஆன சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல் 1 ஜோடி, சா.பொ.4 ஆன சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி ஆகியவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.30/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.130/2020 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான காளீஸ்வரி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 14.09.2020ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**தீர்ப்புரை**

இவ்வழக்கு கடந்த 26.10.2019ம் தேதி மதியம் 2 மணியை போல இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திலிருந்து அவரது ஊருக்கு செல்வதற்காக மதுரை செல்லும் பஸ்சில் ஏறியபோது அவருக்கு பின்னால் எதிரி பஸ்சில் ஏறுவது போல ஏறி புகார்தாரரின் கையில் வைத்திருந்த கட்டைப் பையில் இருந்த மணிப்பர்சில் வைத்திருந்த ரூ.32,500/-மதிப்புள்ள சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம்-1, சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம்-1, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல் 1 ஜோடி, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி ஆக மொத்தம் 13 கிராம் எடையுள்ள தங்க பொருட்களை திருடிய குற்றத்திற்காக திருவில்லிபுத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இதச பிரிவுகள் 379-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி எதிரி ஆஜராக, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி எதிரி மீதான குற்றச்சாட்டினை விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், எதிரி மீது இதச பிரிவு 379-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அவரிடம் குற்றம் குறித்து வினாவிய போது எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறியதால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:–**

(I) அ.சா.1 திரு.காளீஸ்வரி தனது சாட்சியத்தில் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருவதாகவும், கூலி வேலை செய்து வருவதாகவும், 26.10.2019 ம் தேதி காலை 09.00 மணிக்கு தனது ஊரில் இருந்து கிளம்பி திருவில்லிபுத்தூர் துர்கை வேலன் நகைக்கடைக்கு வந்ததாகவும், தன்னுடைய 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றும், 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றும், 2 கிராம் எடையுள்ள தங்க தோடு 1 ஜோடி, 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் ஒரு ஜோடி ஆக மொத்தம் 13 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அழித்து புதிதாக செயின் செய்யவதற்காக வந்ததாகவும், பின்னர் நகைக்கடையில் செயின் செய்வதற்கு கூடுதலாக ரூ.50,000/– கேட்டதினால் தான் இன்றொரு நாள் வருகிறேன் என்று சொல்லிவிட்டு நகைகளை தன்னுடையை மணிபர்சில் வைத்து அந்த மணிபர்சை தனது கட்டைப்பையில் வைத்திருந்ததாகவும், ஊருக்கு செல்வதற்காக மதியம் 02.00 மணியளவில் மதுரை அரசு பேருந்தில் ஏறியதாகவும், பஸ்சில் ஏறி உட்கார்ந்து டிக்கெட் எடுக்க தனது மணி பர்சினை கட்டைப்பையில் பார்த்தபோது தான் நகைகளை வைத்திருந்த மணிபர்சினை காணவில்லை என்றும், தான் பஸ்சில் மணிபர்சினை தேடினேன் கிடைக்கவில்லை. அதனால் வீட்டிற்கு சென்று எனது கணவரிடம் நகை காணாமல்போனது பற்றி சொன்னதாகவும், பக்கத்தில் உள்ளவர்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால் காணாமல் போன நகை கிடைத்துவிடும் என்று சொன்னதால் நான் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 25.11.2019 அன்று திருவில்லிபுத்தூர் காவல் நிலையத்திற்கு வர சொல்லி சுமார் 03.00 மணியளவில் என்னுடைய நகைகளை அடையாளம் காட்டச்சொன்னதால், தான் நான் என்னுடைய நகைகளை அடையாளம் காட்டியதாகவும், தனது நகையை திருடியது மணிமாலா என்று



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

சொன்னார்கள் என்றும், தனது நகைகளை தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் அ.சா. பொ. 1 என்றும், சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று அ.சா.பொ.2 என்றும், சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி அ.சா.பொ.3 என்றும், சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல்1 ஜோடி அ.சா.பொ.4 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.கனகராஜ் தனது சாட்சியத்தில் தற்போது கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக கடந்த 25.11.2019 ம் தேதி 15.00 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்தபோது அழகாபுரி ஆறுமுகம் மனைவி காளீஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 550/2019 இதச பிரிவு –379 ன் கீழ் வழக்குபதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவினையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதில் ஒரு நகலை புலன் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.தேனப்பன் தனது சாட்சியத்தில் தான் சிவகாசியிலுள்ள அண்ணாமலையார் அடகு கடையில் வேலை செய்து வருவதாகவும், கடந்த 26.11.2019 ம் தேதியன்று மணிமாலா என்பவர் தங்கள் கடைக்கு வந்து நகைகளை அடகு வைத்தார் எ'னறும், பின்பு போலீசார் வந்து மணிமாலா அடகு வைத்த நகைகள் திருட்டு நகைகள் என்று கூறி தங்களிடம் இருந்து வாங்கிக்கொண்டு சென்றார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்

(iv) அ.சா.4 திரு.ஆறுமுகம் தனது சாட்சியத்தில் கடந்த 25.11.2009 அன்று தனது



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

மனைவி காளீஸ்வரியும் தனது மகள் சௌந்தர்யாவும் திருவில்லிபுத்தூரிலுள்ள மார்க்கெட்டிற்கு காய்கறி வாங்க வந்தபோது தனது மனைவி கட்டை பையில் வைத்திருந்த மணி பர்சிலிருந்து மோதிரம்–2, கம்மல் ஒரு ஜோடி, மாட்டல் ஒரு ஜோடி, ஆகியவற்றை திருடி சென்றுவிட்டார்கள் என்றும், அது சம்மந்தமாக தனது மனைவியும் தனது அம்மா சீதையும் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தார்கள் என்றும், திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்திலிருந்து தங்களை அழைத்து மேற்படி நகைகளை தனது மனைவியிடம் கொடுத்தார்கள் என்றும், மேற்படி நகையை திருடிய நபர் ஒரு பெண் என்று மட்டும் தெரிந்துகொண்டதாகவும், மற்ற விவரங்கள் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு.கண்ணன் தனது சாட்சியத்தில் தான் கடந்த 25.11.2019 அன்று தான் திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய போலீசார் திருட்டு வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தனர் என்றும், அதன் பின் வரைபடம் வரைந்து எழுதிய தாள் ஒன்றில் தன்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பார்வை மகஜர் அசாஆ.3 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.6 திரு.ஆஞ்சே தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் தன்னுடையதுதான் என்றும், கடந்த 26.11.2019 அன்று தானும் தமிழரசன் என்பவரும் சர்ச் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த நபர் யார் என்று தனக்கு நியாபகமில்லை என்றும், போலீசார் தன்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தனக்கு தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து அசாஆ.4 மற்றும் அத்தாட்சி–4 லிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.5 என்றும், அத்தாட்சி–5 லிலுள்ள 2 வது கையெழுத்து அசாஆ.6 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

(vii) அ.சா.7 திரு.தமிழரசன் தனது சாட்சியத்தில் கடந்த 26.11.2019 ம் தேதி தானும் ஆஞ்சே என்பவரும் திருவில்லிபுத்தூர் சர்ச் அருகிலுள்ள டீ கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தபோது ஒரு பெண் சந்தேகப்படும் வகையில் அங்கும் இங்குமாக சென்றவரை போலீசார் பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தனர் என்றும், தனது அக்காவின் நகை திருடு போனது சம்மந்தமாக தான் காவல்நிலையம் சென்றபோது போலீசார் தன்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.7 என்றும், அத்தாட்சி –4 ல் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.8 என்றும், அத்தாட்சி–5 ல் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.9 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) அ.சா.8 திரு.கருத்தப்பாண்டி தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை ஆயிரம் விளக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 25.11.2019 அன்று சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கு எண்.550/2019 பிரிவுகள்.379 இதச வழக்கு கோப்பை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வரைபடம் அசாஆ.10 என்றும், பின்னர் சாட்சிகள் காளிஸ்வரி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடி வந்து இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்த நிலையில் 26.11.2019 ம் தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனரா வங்கி அருகே சந்தேகத்தின் பேரில் நின்றுகொண்டிருந்த மணிமாலா என்பவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்து பின்னர் 10.20



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்ற எண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும் வாக்குமூலத்தின் அடிப்படையில் 13.45 மணிக்கு சிவகாசி அழகேந்திரன் பைனான்ஸ் அடகு கடை முன்பு சிவகாசி அனுப்பங்குளம் சத்யா நகர் மகாலட்சுமி என்பவரிடம் எதிரி மணிமாலா அடையாளம் காட்டிய வழக்கு சொத்தை மகாலட்சுமி என்பவரிடமிருந்து 4 கிராம் தங்க மோதிரம் ஒன்று, 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் ஒரு ஜோடி ஆகியவற்றை அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.11 ஆகவும், அத்தாட்சி அசாஆ.12 என்றும், அதே சாட்சிகள் முன்னிலையில் 14.30 மணிக்கு சிவகாசி அண்ணாமலை பைனான்ஸ் அடகு கடையில் வைத்து எதிரி மணிமாலா அடையாளம் காட்டியதை தேனப்பன் என்பவரிடமிருந்து 2.300 கிராம் எடையுள்ள தங்க கம்மல் ஒரு ஜோடி அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியதாகவும், அத்தாட்சி அசாஆ.13 என்றும், பின்னர் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், படிவம் 91 அசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்ததாகவும், பின்னர் சாட்சி காளிஸ்வரி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் தேனப்பன், மகாலட்சுமி ஆகியோர்களை விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 21.01.2020 அன்று தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு.379 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விசாரித்தபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனக் கூறிக் கொண்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 379-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

7) இவ்வழக்கு கடந்த 26.10.2019ம் தேதி மதியம் 2 மணியை போல இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திலிருந்து அவரது ஊருக்கு செல்வதற்காக மதுரை செல்லும் பஸ்சில் ஏறியபோது அவருக்கு பின்னால் எதிரி பஸ்சில் ஏறுவது போல ஏறி புகார்தாரரின் கையில் வைத்திருந்த கட்டைப் பையில் இருந்த மணிப்பர்சில் வைத்திருந்த ரூ.32,500/-மதிப்புள்ள சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல் 1 ஜோடி, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி ஆக மொத்தம் 13 கிராம் எடையுள்ள தங்க பொருட்களை திருடினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8). அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9). எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது தனது வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

10). இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 26.10.2019 தனது ஊரிலிருந்து துர்க்கை வேலன் நகை கடைக்கு வந்ததாகவும், தன்னுடைய 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றும், 5 கிராம் எடையுள்ள தங்கம் மோதிரம் ஒன்றும், 2 கிராம் எடையுள்ள தங்கத்தோடு ஒரு ஜோடியும், 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் ஒரு ஜோடியும் ஆக மொத்தம் 13 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அழித்து புதிதாக செயின் செய்வதற்காக வந்ததாகவும், பின்னர் நகை கடையில் செயின் செய்வதற்கு கூடுதலாக ரூ.50,000/– கேட்டதனால் இன்னொரு நாள் வருகிறேன் என்று சொல்லிவிட்டு நகைகளை தன்னுடைய மணிபர்சில் வைத்து அந்த மணிபர்சை தனது கட்டப்பையில் வைத்திருந்ததாகவும், ஊருக்கு செல்வதற்காக மதியம் 2 மணி அளவில் மதுரை அரசு பேருந்தில் ஏறியதாகவும், பஸ்ஸில் ஏறி டிக்கெட் எடுக்க தனது மணி பர்ஸ்சை கட்டை பையில் பார்த்தபோது தன் நகைகளை வைத்திருந்த மணி பர்ஸ்சை காணவில்லை என்றும், பஸ்ஸில் தேடிப் பார்த்ததாகவும் பின்னர் வீட்டிற்கு சென்று தனது கணவரிடம் நகை காணாமல் போனது பற்றி சொன்னதாகவும் பக்கத்தில் உள்ளவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் நகை கிடைத்துவிடும் என்று சொன்னதால், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் பின்னர் 25.11.2019 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் தனது நகைகளை அடையாளம் காட்டியதாகவும் தனது நகைகளை திருடியது மணிமாலா என்று சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 25.11.2019 அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது காளீஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிறைய குற்ற எண்.550/2019 இதச 379 கீழ் வழக்கு பதிவு செய்ததாக கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் குற்றம் நடந்த நாள் 26.10.2019 என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட நாள் 25.11.2019 என்றும், ஒரு மாத காலத்திற்கு பின்னர் தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், முதல் தகவல் அறிக்கையை மறுநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், காலதாமதமாக நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

கிடைக்கப் பெற்றதற்கு சிறப்பான காரணம் எதுவுமில்லை என்றும், திருடிய நபர் குறித்த அடையாளம் புகார் மனுவில் சொல்லவில்லை என்றும், புகார் மனுவில் திருடிய நபர் ஆணா அல்லது பெண்ணா என்பது சொல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 26.11.2019 அன்று மணிமாலா என்பவர் தங்கள் கடைக்கு வந்து நகைகளை அடகு வைத்ததாகவும் பின்னர் போலீசார் வந்து மணிமாலா அடகு வைத்த நகைகள் திருட்டு நகைகள் என்று கூறி தங்களிடமிருந்து வாங்கிக் கொண்டு சென்றதாகவும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், போலீசார் சுமார் 2 கிராம் நகைகளை தங்களிடமிருந்து வாங்கிக் கொண்டு சென்றதாகவும், மணிமாலாவை தனக்கு தெரியும் என்றும், அடகு வைக்கும் போது நகைகளையும் அடகு வைத்த நபரையும் போட்டோ எடுத்ததாகவும், மேற்படி சம்பவத்தன்று மணிமாலா தனது ஆதார் அட்டையை கொடுத்து தான் நகைகளை அடகு வைத்ததாகவும், கடந்த 26.11.2019 அன்று சுமார் ரூ.6000/−க்கு அடகு வைத்ததாகவும், மணிமாலாவின் போட்டோ, ஆதார் அட்டை மற்றும் அடகு வைத்த ரசீதை போலீசாரிடம் கொடுத்ததாகவும் ஒருவர் தங்கள் கடையில் நகைகளை அடகு வைத்தால் தங்கள் கடையில் உள்ள பதிவேட்டில் எழுதுவதாகவும், அந்த பதிவேட்டை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 25.11.2009 அன்று தனது மனைவி காளீஸ்வரியும் மகள் சௌந்தர்யாவும், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மார்க்கெட்டிற்கு காய்கறி வாங்க வந்தபோது தனது மனைவி கட்டைப்பையில் வைத்திருந்த மணி பரிசிலிருந்து மோதிரம் இரண்டு, கம்மல் ஒரு ஜோடி, மாடல் ஒரு ஜோடி ஆகியவற்றை திருடி சென்று விட்டார்கள் என்றும் அது சம்பந்தமாக தனது மனைவியும் தனது அம்மா சீதையும் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்ததாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்திலிருந்து தங்களை அழைத்து மேற்படி நகைகளை தனது மனைவியிடம் கொடுத்தார்கள் என்றும், மேற்படி நகையை திருடிய நபர் ஒரு பெண் என்று மட்டும்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

தெரிந்து கொண்டதாகவும், மற்ற விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி நகை காணாமல் போனது சம்பந்தமாக தனது மனைவியும் தனது மகளும் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து ஒரு வாரத்தில் தங்களது நகையை திரும்பி தங்களிடம் கொடுத்து விட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 25.11.2019 அன்று தான் ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய போலீசார் திருட்டு வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரித்ததாகவும், அதன் பின் வரைபடம் வரைந்து எழுதிய தாள் ஒன்றில் தன்னிடம் கையெழுத்து பெற்றதாகவும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் தன்னிடம் கையெழுத்து பெற்ற மேற்படி தாளில் என்ன எழுதி இருந்தது என்பதை பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

16. ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில், கடந்த 26.11.2019 அன்று தானும் தமிழரசன் என்பவரும் சர்ச் அருகில் பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் ஒருவரை விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அந்த நபர் யார் என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும், போலீசார் தன்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கியதாகவும், வழக்கு சம்பந்தமாக வேறு ஒன்றும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

17. மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில், கடந்த 26.11.2019 அன்று தானும் ஆஞ்சே என்பவரும் ஸ்ரீவில்லிபுத்தூர் சர்ச் அருகில் உள்ள டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தபோது, ஒரு பெண் சந்தேகப்படும்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

வகையில் அங்கும் இங்கும் சென்றவரை போலீசார் பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், தனது அக்காவின் நகை திருடு போனது சம்பந்தமாக தான் காவல் நிலையம் சென்றபோது போலீசார் தன்னிடம் கையெழுத்து பெற்றதாகவும், வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

18. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, இவ்வழக்கில் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் 26.10.2019 அன்று புகார் அளிக்கப்படாமல், ஒரு மாதம் கழித்து 25.11.2019 அன்றுதான் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு மாத காலதாமதத்திற்கு அரசுத் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் முறையான அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் அளிக்கப்படவில்லை. புகார்தாரரான அ.சா.1, தனது நகைகளை மணிமாலா தான் திருடினார் என்று தன்னிடம் சொன்னதாக சாட்சியம் அளித்திருந்தாலும், அந்தத் திருட்டுச் சம்பவத்தை அவர் நேரடியாகப் பார்க்கவில்லை. பேருந்தில் ஏறிய பிறகு பையில் பர்ஸ் இல்லை என்பதை மட்டுமே அவர் உணர்ந்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், புகாரில் திருடிய நபர் யார் என்றோ, அவர் ஆணா அல்லது பெண்ணா என்றோ எந்த அடையாளமும் குறிப்பிடப்படவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட நகைகளை உறுதிப்படுத்த வேண்டிய சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகிய இருவரும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். போலீசார் தங்களிடம் விசாரணை நடத்தவில்லை என்றும், தாளில் என்ன இருந்தது என்று தெரியாமலேயே கையெழுத்திட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். மேலும், அ.சா.3–ன் கடையில் நகையை அடகு வைத்ததற்கான பதிவேடு மற்றும் அடகு வைக்கப்பட்டதாக கூறப்படும் நகைகளுக்கு மேற்படி அடகு கடையில் கொடுக்கப்பட்ட ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

19. எனவே, இவ்வழக்கில் ஒரு மாதம் தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் அதற்கான தகுந்த விளக்கத்தினை கொடுக்காததைக் கருத்தில் கொண்டும், முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயரோ, அங்க அடையாங்களோ குறிப்பிடாததை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது குறித்து தெளிவான சாட்சியங்கள் இல்லாததை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளே பிறழ்சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டும், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று நீதிமன்றம் கருதுகிறது. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

20. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரியின் மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சா.பொ.1 ஆன சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சா.பொ.2 ஆன சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 1, சா.பொ.3 ஆன சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல் 1 ஜோடி, சா.பொ.4 ஆன சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி ஆகியவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.30/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.130/2020 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான காளீஸ்வரி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

22. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் மார்ச் மாதம் **06** ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**1. அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | திருமதி.காளீஸ்வரி |
| அ.சா.2 | – | திரு.கனகராஜ் |
| அ.சா.3 | – | திரு.தேனப்பன் |
| அ.சா.4 | – | திரு.ஆறுமுகம் |
| அ.சா.5 | – | திரு.கண்ணன் |
| அ.சா.6 | – | திரு.ஆஞ்சே |
| அ.சா.7 | – | திரு.தமிழரசன் |
| அ.சா.8 | – | திரு.கருத்தப்பாண்டி |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | – | அத்தாட்சி 4 ல் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | – | அத்தாட்சி 5 ல் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |

அ.சா.ஆ.7 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.8 – அத்தாட்சி 4 ல் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.9 – அத்தாட்சி 5 ல் உள்ள அ.சா.7 ன் கையொப்பம்

அ.சா.ஆ.10 – வரைபடம்

அ.சா.ஆ.11 – ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.12 – அத்தாட்சி

அ.சா.ஆ.13 – அத்தாட்சி

அ.சா.ஆ.14 – படிவம் 91

**3. அரசு தரப்பு சான்று பொருள்** –

சா.பொ.1 – சுமார் 4 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று

சா.பொ.2 – சுமார் 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று

சா.பொ.3 – சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் 1 ஜோடி

சா.பொ.4 – சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க கம்மல் 1 ஜோடி

**4. எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்** –இல்லை.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |